கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி



இணைய வார இதழ்

www.newwisdomministries.com

03.04.2022 ஞானம் 5 – ஒலி 14



## கொடுப்பவருக்கு எதுவும் சாத்தியம் இது சத்தியம்!



அருட்பணி.சைமன் பீட்டர்

# கொடுப்பவர் இறைத்தூதர்

அன்பிற்கினிய ஞான ஒலி வாசக அன்பர்களே, நம் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் வணக்கங்களையும், நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

இவ்வுலகில் பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் இங்கு அவை செய்து முடிக்க வேண்டிய பொறுப்புக்களோடுதான் பிறக்கின்றன இயேசு உட்பட. ஒவ்வொன்றுக்கும் சிறப்பான கடமைகள் உண்டு. அவை அவற்றை நிறைவேற்றுவதுதான் அதன் பிறப்பின் நோக்கம். அனைத்து உயிர்களும் தனக்காகவே வாழ படைக்கப்படவில்லை. இந்த நிதற்சன உண்மையை அனைத்தும் உரிய காலத்தில் உணர்ந்து கொண்டு அதைத் தன் இறுதிக்காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும்.

பிள்ளைப் பேறு இல்லாத பெற்றோர்களின் உள்ளங்களின் துடிப்புதான் இந்த உண்மையின் வலியை உணர்த்துகின்றன. விதைக்கப்படாத விதைகளின் மௌனத்தின் வலியும் இதைத்தான் உணர்த்துகின்றது. தவமிருந்து பிள்ளை பெறும் தாயின் முகத்தில் தெரியும் பிரகாசமும், முளைத்து வளரும் விதையின் வளமையான பசுமையில் தெரியும் மலர்ச்சியும் இந்த படைப்பின் நோக்கத்தின் உண்மையை வெளிப்படுத்துகின்றன.

பசியோடு வாடும் ஒருவருக்கு உணவளித்து அவரின் பசி தீர்ந்த முகத்தில் உயிர்க்கும் முகமலர்ச்சியில்தான் அவருக்கு உணவளித்தவருக்கு மனநிறைவு கிடைக்கும். அப்போதுதான் தன் பிறவிப் பயனை அவர் அறிய முடியும். ஓ உதவுவதில் இவ்வளவு சந்தோஷமா? இவ்வளவு மனநிறைவா? என்று அவரில் தோன்றும்.. அதைத் திரும்பத் திரும்ப செய்ய வேண்டும் என்ற வேட்கையில்தான் தனது பிறப்பின் நோக்கத்தை அவர் அறிந்து கொள்கின்றார்.

பிறர் வாழ வாழும் வாழ்க்கையின் போதையை சுவைத்தவர்கள் அதை ஒரு போதும் தவற விடமாட்டார்கள். அதைத் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டும் என்று உறுது ஏற்கின்றார். அதன் வெளிப்பாடுகள்தான் அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், அன்னதான சத்திரங்கள். வலது கை செய்வதை இடது கை அறியாமல் செய்வோர் ஏராளம்.

பெறுபவர் எல்லாம் கீழாவார், கொடுப்பவரோ மேலாவார் என்ற கொடுத்துச் சிவந்த கர்ணன் திரைப்படப்பாடல் நமக் இதையே வலியுறுத்துகின்றது.

இரண்டு மீனைகள், ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்த அற்புதம் வழியாக இயேசு நம்மிடமிருந்தும் அந்த இரண்டு மீன்கள், ஐந்து அப்பங்களிடமிருந்தும் இந்தத் தியாகத்தையே எதிர்பார்க்கின்றார். தன்னைப் பின்பற்ற விரும்பிய பணக்கார இளைஞனிடம் – நிறைவுள்ளவராக விரும்பினால், நீர் போய் உம் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர் பின்பு வந்து என்னைப் பின்பற்றும் – மத்தேயு 18/21 – என்றார்.

ஏழை லாசருக்கு ஒரு சிறு அப்பத்துண்டுகூட கொடுக்காத, தான்திண்ணி இறந்த பிறகு நரகத்தில் வாடினான் என்ற விவிலிய உவமை பிறருக்காக உதவும் மனதின் சிறப்பை எடுத்துக் சொல்கின்றது.

ஒரு நெல் விதையிலிருந்து எத்தனைக் கோடானு கோடி நெல்மணிகள் வரும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. அதேபோல அந்த ஒரு நெல் மணியிலிருந்து விளையும் அனைத்து விதைகளும் இவ்வாறே தொடர் விளைச்சலில் கோடிணு கோடி நெல்மணிகளை விளைவித்துக் கொண்டே இருக்கும். ஒரே ஒரு நெல் மணியின் விளைச்சலும், அதன் பிள்ளை நெல் மணிகளும் தங்களின் தொடர் விளைச்சலால் இந்தப் பிரபஞ்சத்தையே நிரப்பி வழியும் என்பது எவ்வளவு பெரிய பேருண்மை. அதுவே தானத்தின் சிறப்பை நமக்குப் போதிக்கின்றது. அதுபோல நாம் ஒவ்வொருவரும் பிறருக்கு உதவுவதையே நமது இலட்சியமாகக் கொள்வோம்.

இன்று உலகத்தில் இயேசுவை அறிக்கை யிடுவதைப்போல வேறு யாரைப்பற்றியும் யாரும் அறிக்கை யிடுவதில்லை. இடைவிடாது இயேசு உலகமெங்கும் அறிவிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றார். அதோடு அவர் தன்னை உலகுக்கு கொடுத்ததையும் அறிக்கை யிடப்படுகின்றது.

இயேசு சொன்ன மிக மிக முக்கியமான செய்தி என்னவென்றால்.....

கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கின்றீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். – லூக்கா 6/38

தானமே மிகச் சிறந்த தவம். வளமையான வழி.



# விவிலியம் அறிவோம் – 32

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## ஏசா யாக்கோபு பிறப்பும் வாழ்வும்

ஏசா யாக்கோபு பிறப்பு பற்றி தொநூ 25:19-26 வரையுள்ள பகுதியிலே வாசிக்கிறோம். இப்பகுதி இஸ்ரயேலின் மூதாதையர்களில் மிகவும் முக்கியமானவரான யாக்கோபு பற்றிய கதைகளைத் தொடங்கி வைக்கிறது. ஈசாக்கின் திருமணத்தைப் பற்றி நாம் ஏற்கனவே சிந்தித்தோம். ஈசாக்கு தன் மனைவியை மிகவும் அன்பு செய்தார். ஏறக்குறைய இருபது வருடங்களாக அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. ரெபேக்காவின் பிள்ளைபெற முடியாத நிலை ஈசாக்கின் தாயான சாராவின் நிலையை நமக்கு நினைவூட்டுகிறது. ஆனால் ரெபேக்காவின் நிலை அதிக நாள் நீடிக்கவில்லை. ஈசாக்கு பிள்ளைபெற முடியாமலிருந்த தம் மனைவிக்காக ஆண்டவரிடம் மன்றாடினார். ஆண்டவரும் அவர் மன்றாட்டைக் கேட்டருளினார். அவர் மனைவி ரெபேக்கா கருத்தரித்தார் (தொநூ25:21) என ஆசிரியர் ஒரு சொற்றொடரிலேயே ரெபேக்காவின் பிரச்சினையைத் தீர்த்துவைக்கிறார். அவர் இரட்டைக் குழந்தைகளைக் கருத்தரிக்கிறார். கருத்தரித்ததால் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சில நாள்களிலேயே மாற்றம் காண்கிறது. ஏனெனில், அவருடைய கருப்பையில் இருந்த புதல்வர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டனர் என வாசிக்கிறோம். ரெபேக்கா அதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்.எள்ள செய்வது? ரெபேக்காவை முதல் முதலில் சந்தித்தபோது அவரை விருந்தோம்பலில் சிறந்தவராக, எளிமையானவராகப் பார்க்கிறோம். ஆபிரகாமின் வேலையாளுக்கு பணிவிடைகள் செய்கிறார்; ஈசாக்கிற்கு மனைவியாக அவருடன் செல்வதற்கு தயாராக வருகிறார். கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்மணியாக, அழகானவராக இருக்கிறார். இப்பகுதியில் இன்னும் ஒரு சிறப்பை நாம் காணமுடிகிறது. அவர் கடவுள் பக்தி மிகுந்தவராகவும் இருக்கிறார். அவருடைய கருப்பையில் இருந்த புதல்வர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக்கொள்வதை உணர்ந்ததும் அவர், எனக்கு இப்படி நடப்பது ஏன்? என ஆண்டவரிடம் கேட்கச் செல்கின்றார். ஆண்டவர் அவருக்குப் பதில் கூறுகிறார். ஆண்டவரின் பதில் அவருக்கு உறுதியளிப்பதாக இருந்தாலும் கவலை தரும் செய்தியும் அதில் அடங்கியிருக்கிறது.உன் கருப்பையில் இரு இனங்கள் உள்ளன; உன் வயிற்றிலிருந்தே ஈரினத்தார் பிரிந்திருப்பர். ஓர் இனம் மற்றதைவிட வலிமை மிக்கதாய் இருக்கும் மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருப்பான் (தொநூ 25:23) என கடவுள் அவருக்குக் கூறுகிறார்.

ஆண்டவர் ரெபேக்காவிற்குக் கூறுகின்ற இந்த வார்த்தைகள் ஏசா மற்றும் யாக்கோபு ஆகியோரின் வாழ்க்கைச் சுருக்கம் எனக் கூறலாம். ஏசா யாக்கோபு கதைகளை நாம் தொடர்ந்து வாசிக்கும் போது நமக்கு இது தெளிவாகத் தெரிகிறது. ரெபேக்காவுக்கு பேறுகாலம் வந்தபோது அவள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார். முதலாவது பிறந்தவனுக்கு ஏசா எனப் பெயரிடுகின்றனர். ஏசாவின் குதிங்காலைப் கையால் பற்றிக்கொண்டு இரண்டாமவன் வெளிவருகிறான். அவனுக்கு யாக்கோபு எனப் பெயரிடுகின்றனர். ஏசாவும் யாக்கோபும் பிறக்கும்போது ஈசாக்கிற்கு அறுபது வயதாகிறது. ஏசா யாக்கோபு கிளைக்கதைகள் விவிலியத்தில் பல உள்ளன. குறிப்பாக, யாக்கோபு பற்றிய கதைகள் பல உள்ளன. ஏனெனில்

இஸ்ரயேல் மக்களின் தந்தையாக அவர் இருக்கின்றார். எனவே அவர்களைப் பற்றி வருகின்ற கிளைக்கதைகளை அடுத்து வரும் பகுதிகளில் நாம் ஆழமாகச் சிந்திக்கலாம். இந்தப் பகுதியில் ஏசாவும் யாக்கோபும் விவிலியத்தில் எவ்வாறு சித்தரிக்கப் படுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். ஏசாவும் யாக்கோபும் விவிலியத்தில் சித்தரிக்கப்படுகின்ற விதத்தை தொடக்கத்திலே நாம் அறிந்துகொள்வது பின்னால் வருகின்ற ஏசா யாக்கோபு கதைகளை புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். விவிலியத்தில் யாக்கோபும் ஏசாவும் இரண்டு மாறுபட்ட மனிதர்களாக, இரண்டு மாறுபட்ட கலாச்சாரத்தின் பிரதிநிதிகளாகச் சித்தரிக்கப்படுகின்றனர். உதாரணமாக,ஏசா இஸ்ரயேல் கலாச்சாரத்திற்கு முரண்பட்ட கலாச்சாரத்தின் பிரதிநிதியாக சித்தரிக்கப்படுகிறார். அவரது பிறப்பிலும், பழக்கவழக்கங்களிலும் எதிர்மறை இயல்பை உடையவராக காணப்படுகிறார். ஏசா ஈசாக்கின் தலைமகன். எனவே அவர் ஒருகுடும்ப உறுப்பினர். அவரைத் தவிர்க்கமுடியாது. அதேவேளையில் அவரது வழிகளைப் பின்பற்றாமல், வரலாற்றை அவர் வழியில் உருவாக்கவிடாமல் வாழவேண்டும் என விவிலியம் பதிவுசெய்கிறது. ஆனால் யாக்கோபு எதிர்கால இஸ்ரயேல் நாட்டின் தந்தையாக வருபவர். வரலாற்றில் நிறைவுசெய்ய வேண்டிய ஒரு பணி அவருக்கு உள்ளது. ஒழுங்கற்ற ஒரு உலகிற்கு அவர் அர்த்தத்தைக் கொடுக்கவேண்டும். அதில் ஒழுங்கை ஏற்படுத்தி மனிதநேயம் நிறைந்ததாக மாற்றவேண்டும். அவரே அதன் தலைவராக இருந்து வழிநடத்தவேண்டும்.



ஏசா பிரதிநிதியாக வெளிப்படுத்தும் கலாச்சாரத்தையும் நாட்டையும் முதலில் ஆராய்வோம். ஏசா பிறப்பின்போது

செந்நிறமாகவும் உடல் முழுவதும் முடிமயமாகவும் இருந்தார் (தொநூ 25:25). எனவேதான் அவருக்கு ஏசா எனப் பெயரிட்டனர் என விவிலியம் பதிவு செய்கிறது. எபிரேய மொழியில் செந்நிறம் admoni என்ற சொல்லால் கூறப்படுகிறது. ஏசா செந்நிறமாக இருந்ததால் அவரது வழிமரபினர் ஏதோமியர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். அதாவது ஏசா ஏதோம் நாட்டின் தந்தையாகச் சித்தரிக்கப்படுகிறார். ஏசா பிறக்கும் போது அவருடைய உடல் முழுவதும் முடிமயமாக இருந்தார் என்பதைக் குறிப்பதற்;கு se'ar என்ற எபிரேயச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இது ஏதோமியர்கள் வாழ்ந்த சேயிர் நாட்டைக் குறிப்பதாவும் இருக்கலாம். எபிரேய மொழியில் இது ஒரு வார்த்தை விளையாட்டு எனலாம். ஏசா ஏன் ஏதோம் என அழைக்கப்பட்டார் என்பதற்கு தொடக்க நூல் 25:30 விளக்கமளிக்கிறது. அப்பகுதியிலும் இந்த வார்த்தை விளையாட்டை காணமுடிகிறது. ஏசா தனது சகோதரனான யாக்கோபிடமிருந்து செந்நிறச் சுவையான கூழைப் பெறுவதற்காக தலைமகனுக்குரிய உரிமையை யாக்கோபிற்கு விற்கிறான். இங்கு குறிப்பாக அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று உண்டு. தொடர்ந்து வருகின்ற ஏசா யாக்கோபு கதைகள் ஏதோமியர்களை இஸ்ரயேலர்களின் எதிரிகளாகக் காட்டுகிறது. யாக்கோபு ஏதோமியர்களை வெற்றிகொண்டு வாழ அழைக்கப்படுகிறார். ஏனெனில் ஏதோமியர்களின் கலாச்சாரம் இஸ்ரயேலர்களின் கலாச்சாரத்திற்கு முரண்பட்டதாக உள்ளது. இஸ்ரயேல் ஏதோமியர்களை அடிமைப்படுத்துவது தாவீதின் காலத்தில் நடைபெறுகிறது. தாவீது அரசராக ஆட்சிசெய்த காலத்தில் அம்மோனியர்களையும், மோவாபியர்களையும், ஏதோமியர்களையும் அடிமைப் படுத்தியிருந்தார்.; ஏசா மிகவும் மனக்கசப்படைந்து பெருங்குரலெழுப்பிக் கதறியழுதான் என தொநூ 27:34 இல்; வருகின்ற சொற்றொடரை இந்தப் பின்னணியிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும்.

ஏசா வேட்டையில் வல்லவனாய், திறந்தவெளி மனிதனாய் வாழ்ந்து

வந்தான் என தொநூ 25:27 பதிவு செய்கிறது. எனவே அவனது கலாச்சாரம் இரத்தம், சாவு இவைகளைத் தன்னகத்தே கொண்ட சட்டத் தூய்மையின்மை என்றகருத்துடன் தொடர்புடையதாக இருந்தது. ஏசா மேல் ஈசாக்கு தனி அன்பு கொண்டிருந்தார். ஏனெனில் ஏசா வேட்டையாடிக் கொண்டுவந்த மாமிசத்தை அவர் மிகவும் விரும்பினார் (தொநூ 25:28). ஏசாவுக்கு நாற்பது வயதானபோது, இத்தியன் பெயேரியின் மகள் யூதித்தையும் இத்தியன் ஏலோனின் மகள் பாசமத்தையும் மணந்துகொண்டான். ஏசா இத்தியப் பெண்களை மணந்தது பெற்றோருக்குப் பிடிக்கவில்லை. ஏசாவின் இத்திய மனைவியரால் ஈசாக்கும் ரெபேக்காவும் மனக்கசப்பு அடைந்தனர் என தொநூ 26:34 பதிவு செய்கிறது. எனவே ரெபேக்கா ஈசாக்கை நோக்கி இத்தியப் பெண்களை முன்னிட்டு என் வாழ்க்கை எனக்குச் சலித்துப் போயிற்று (தொநூ 27:46) என்கிறார். எஸ்ரா நூலின்படி ஏசா கலப்பினத் திருமணம் செய்துகொண்டதால் இஸ்ரயேல் இனத்தை மாசுபடுத்தியவராகிறார். இதனால் வாக்களிக்கப்பட்ட நாட்டின் நலன்களை அனுபவிக்கும் உரிமையை இழந்துவிட்டவராகின்றார் (எஸ்ரா 9:2; 10-15). கடவுளின் பார்வையில் அவர் அந்நியப்படுத்தப் பட்டவராக மாறுகின்றார்.

தொநூ 25:19-36:43 வரையுள்ள பகுதி யாக்கோபின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை விவரிக்கின்றது. இப்பகுதி யாக்கோபை தன் தமையனான ஏசாவுக்கு எதிர்மறையான சாலாச்சாரத்தைக் கொண்ட ஒரு இனத்தின் பிரதிநிதியாகச் சித்தரிக்கிறது. யாக்கோபு தன் சகோதரனை எதிர்கொண்டு அவன் மேல் ஆதிக்கம் செலுத்துவார் என விவிலியம் பதிவு செய்கிறது. ஆனால் இந்த ஆதிக்கத்தை அவர் நேர்மையான முறையில் இல்லாமல் சூழ்ச்சியான முறையில்தான் ஏற்படுத்துவார். யாக்கோபு என்ற பெயருக்கு ஏமாற்றுபவன் என்பதுதான் பொருள். யாக்கோபின் ஏமாற்றுச் செயல்கள் பல உண்டு; அவற்றை நாம் விரிவாகப் பின்னால் பார்க்கலாம். பிற்காலத்தில் யாக்கோபு இஸ்ரயேலாக மாற்றம் பெறுவார். அந்த மாற்றம் அவரை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும். பிற இனத்தவர் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு கலாச்சாரத்தை, ஒரு அமைப்பை, சட்ட ஒழுங்கை ஏற்படுத்திய பிறகே யாக்கோபு-இஸ்ரயேல் வெளிச்சத்திற்கு வருவார். எனவே இந்த பிரபஞ்சத்தில் அவர் நிலைத்து நிற்க தனக்கு முன் பிறந்தவனின் காலைப் பற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.



யாக்கோபு தன் சகோதரன் ஏசாவின் குதிங்காலை கையால் பற்றிக்கொண்டு வெளிவந்தான் என தொநூ 25:26 கூறுகிறது. எனவேதான் அவர்; யாக்கோபு என்ற பெயரைப் பெற்றார்;. இது எதேச்சையாக நடந்த ஒன்றாக நாம் கருதக்கூடாது. தொடக்க நூல் 25:27-34 வரையுள்ள பகுதி இரண்டு நாகரீகங்களின் சமூக. கலாச்சார போராட்டத்தைக் குறிக்கிறது. அதாவது வேட்டையாடி வாழ்ந்தவர்களுக்கும் மேய்ப்புத்தொழில் புரிந்து வாழ்ந்தவர்களுக்கும் இடையில் நடந்த போராட்டம் அது. வாழ்வை அழிப்பவர்களுக்கும் வாழ்வை பாதுகாப்பவர்களுக்கும் இடையில் நடந்த போராட்டம். பொதுவாக மேய்ப்புத்தொழில் புரிந்து வாழ்ந்தவர்கள் வாழ்வைப் பாதுகாப்பவர்களாக இருந்தவர்கள். எனவே அவர்கள் மதிக்கத்தக்க, ஒழுங்குமுறைகளில் உயர்ந்த ஒரு நாகரீகத்தின் பிரதிநிதிகளாக கருதப்பட்டார்கள். யாக்கோபு இப்படிப்பட்ட ஒரு இனத்தின், நாட்டின் தந்தையாக கருதப்பட்டவர்.

யாக்கோபு பகுதியில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் அனைத்தும் வரலாற்று உண்மைகள் என்றோ, யாக்கோபின் வாழ்வில் நிகழ்ந்த தொடர் நிகழ்வுகள் என்றோ எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக இவை மனித அனுபவங்களை விவிரிக்கின்றன. கடவுள் எவ்வாறு வரலாற்றில் செயல்படுகிறார் எனவும், எவ்வாறு படிப்படியாக பல நாடுகளும், மக்களினங்களும் உருவாக உதவி செய்கிறார் எனவும் விளக்குகின்றன. யாக்கோபு, இப்பகுதியில், தனிமனிதனாக அல்ல மாறாக இஸ்ரயேல் நாட்டின் தந்தையாகச் சித்திரிக்கப் படுகிறார். தனது பன்னிரெண்டு பிள்ளைகளுடன் அவர் இஸ்ரயேல் நாட்டின் தோற்றத்திற்கு காரணமாக இருக்கிறார் என்றால் மிகையாகாது (39:9-12). எனவே யாக்கோபு இஸ்ரயேல் நாட்டை, மக்களினத்தை பிரதிபலிக்கிறார். இஸ்ரயேல் நாட்டின் வரலாற்றை அறிய யாக்கோபின் வாழ்வு பெருந்துணை புரிகின்றது. யாக்கோபை அறிவது என்பது இஸ்ரயேல் நாட்டை அறிவது போலாகும். எனவே நாம் யாக்கோபைப் பற்றிப் பேசும்போது ஒரு தனிமனிதனைப் பற்றிப் பேசவில்லை, மாறாக இஸ்ரயேல் நாடு உருவாக காரணமாக இருந்த ஒரு மக்களினத்தைப் பற்றிப் பேசுகிறோம் என்பதை நினைவில் வைப்பது நல்லது.

யாக்கோபின் பணி இஸ்ரயேல் நாட்டிற்கு தந்தையாக இருப்பது மட்டுமல்ல, அவர் எல்லா நாடுகளையும், கலாச்சாரங்களையும் ஒன்றிணைக்க வேண்டும். அந்தக் கலாச்சாரங்களில் மனிதநேயத்தை உட்புகுத்த வேண்டும். இந்த உலகில் அன்பு, நீதி, அமைதி போன்ற மதிப்பீடுகளைக் கொண்ட ஒரு புது உலகை படைக்கவேண்டும். சுருங்கக் கூறினால் யாக்கோபு அழிவினாலும், சாவினாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வுலகிற்கு வாழ்வு கொடுக்கவேண்டும். யாக்கோபு ஆண்டவரின் கருவி. எல்லா மக்களும் வாழ்வு பெற, இறை ஆசீரைப் பெற்றுத் தரும் கடவுளின் பிரதிநிதி அவர்.யாக்கோபை பிரதிநிதியாகக் கொண்ட நாடும், கலாச்சாரமும் கடவுளுக்கு விருப்பமானதாயிருந்தது. எனவே யாக்கோபை தனிப்பட்ட விதத்தில் கடவுள் அன்புசெய்தார். அந்த மக்களுக்கு பொருளாதாரச் செழிப்பை கடவுள் வழங்குவார். தொடக்க நூல் 27:29 இல் இன்னோரு ஆசீர் யாக்கோபை பிரதிநிதியாகக் கொண்ட நாட்டிற்கு கொடுக்கப்படுகிறது. இது ஒரு அரசியல் சம்பந்தமான ஆசீர். அதாவது எல்லா நாடுகளும், மக்களினங்களும், சகோதரர்களைத் தலைவர்களாகக் கொண்ட நாடுகளும் இஸ்ரயேல் நாட்டின் அரசியல் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும்.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை


அருட்பணி. ராபர்ட்
உதவி பங்குத்தந்தை,
புனித பெரிய அந்தோணியார் திருத்தலம்
மாரம்பாடி, திண்டுக்கல்.


**தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு**
**03-04-2022**

**எசாயா 43 : 16 - 21 / பிலி. 3 : 8-14 / யோவா. 8 : 1-11**

## “கல்லெறிவோம்”

உலகமே இன்றும் நினைத்து பயமுறும் ஆளுமைகளில் ஒருவர் ஹிட்லர். இரண்டாம் உலகப்போரில் தன் படையால் உலகையே ஆட்சி செலுத்திய தருணம். 1யாருமே ஹிட்லருக்கு எதிராக பேச மறுத்து பயந்து ஒளிந்த காலம். ஆனால், சார்லி சாப்ளின் தான் நடித்த படமான “The Great Dictator” என்ற படத்தின் மூலம் ஹிட்லரின் மீது கல் எறிவார். ஹிட்லரின் அட்டூழியங்கள் அனைத்தையும் படம் முழுக்க வெளிப்படுத்துவார். படத்தின் இறுதியில் சாப்ளின் ஹிட்லரைப் போல பேசுவார். அது இன்றளவும் உலகத்தின் மிகச்சிறந்த சொற்பொழிவுகளில் ஒன்றாக பார்க்கப் படுகிறது. அதில் அவர் கூறுவார்: நீங்கள் இயந்திரமாக மாறியுள்ளீர்கள்; உங்கள் இதயமும், மனநிலையும் இயந்திரமாக மாறியுள்ளது. உங்களில் ஞானம் தந்திரமாய் உள்ளது. அறிவு நையாண்டித்தனம் செய்கிறது. ஆனால் இவையெல்லாம் தேவையில்லை. அன்பும் மானுட நேயமே நமது மூச்சாக இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுப்பாராம். இந்த படத்தை ஹிட்லரும் பார்த்து தன் நிலையறிந்து தலை குனிவாராம்.

அன்பிற்கினியவர்களே, தவக்காலத்தின் ஐந்தாம் வார பயணத்தை துவங்குகின்றோம். இறைவன் இன்றைய நாளுக்குரிய இறைவார்த்தையால் கல்லெறிய நமக்கு அழைப்பு விடுக்கின்றார். திருவிவிலியத்தில் கல் தனக்கென ஒரு ஆன்மீகத்தை, வரலாற்றை, பின்புலத்தை கொண்டிருக்கிறது. கல்லின் தன்மையை மனிதரின் ஆளுமையோடும் பொறுத்திப் பார்க்கப் பட்ருக்கிறது. உதாரணத்திற்கு, மத். 21:42ல் இயேசு தன்னை மூலைக்கல்லாக பொருத்திப் பார்த்து பேசுகிறார். தொ.நூ 28:18ல் பார்க்கின்றோம்: யாக்கோபு அதிகாலையில் எழுந்து தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து அதை நினைவுத்தூணாக நாட்டுகின்றார். யோசுவா 4:19ல் வாசிக்கின்றோம்: 12 குலங்களை குறிக்கும் 12 கற்களைப்பற்றி உங்கள் பிள்ளைகள் கேட்டால் செங்கடலை கடந்து வந்த போது, இறைவனின் கரங்கள் காத்ததற்கான அடையாளமாக கற்கள் நாட்டப்பட்ருக்கிறது என்கிறார். தாவீது தான் வைத்திருந்த கல்லால் கோலியாத்தை வெல்கின்றான். ஆக, கல் என்பது கடினமான தன்மை கொண்டது. அப்படிப்பட்ட கல்லைக்கொண்டு நாம் ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும் என்பது நமக்கு புலப்படுகிறது.

இன்றைய நற்செய்தி வாசகத்திலும் கற்கள் இடம் பெறுவதை காண்கின்றோம். குற்ற உணர்வுமிக்க, நொறுங்கிய உள்ளத்தோடு விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை, இயேசுவின் முன்பாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள் ஆதிக்க சக்திகள். முடிந்தவரை ஒருவருடைய வாழ்க்கையை பாழாக்கிய அக்கூட்டம் அப்பெண்ணை நடுத்தெருவுக்கு இழுத்து வந்திருக்கிறது. தங்களுக்கு தெரிந்த மோசேவின் சட்டமாகிய கல்லெறிந்து கொள்ளுதலை தெளிவாக கூறி இயேசுவையும் சோதிக்கின்றனர். இயேசு மோசேயின் சட்டத்தை கையிலெடுத்தால் இரக்கமற்றவன் என சொல்லுவார்கள்; அவளை மன்னித்து விட்டாள் மோசேயின் சட்டத்திற்கு எதிரானவன் என்ற பெயர். என்ன தான் செய்யப் போகிறான் என்று உற்று நோக்கிய உள்ளங்களை தன் வார்த்தையை கற்களாக்கி எறிகின்றார். இயேசு எறிந்த கல்லால் சுக்கு நூறாகிப்போன உள்ளங்கள் கற்களை விட்டுவிட்டு திரும்பி செல்லுகின்றனர். அனைவருமே குற்றவாளி எனத்தீர்ப்பிட்ட போது இயேசு மட்டும் துணிந்து மனித நேயத்துடன் அவளின் மாண்பை காக்க கல் எறிகின்றார். உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் கல் எறியட்டும் என்ற கல்லால் அனைவரின் கள்மனமும் உடைந்து போகச்செய்கின்றார். தங்களுடைய பாவத்தை உற்று நோக்காமல்இ பிறரின் பாவநிலையை தூக்கிப்பிடிக்கும் ஒவ்வொருவருக்கும் இது பாடமாக அமைகிறது.

இயேசு இங்கு தவறு செய்த அந்த பெண்ணை தண்டிக்காமல் விட்டு விட்டார் என நாம் நினைத்து விடக்கூடாது. இனி பாவம் செய்யாதீர் என்ற கல்லை அவள் மீதும் எறிகிறார். இந்த கல் சாதாரண கல் அல்ல. அவளது மனத்தை புடமிட்டுருக்கும் கூர்மையான கல்;. இந்த கல்லை பல இறைவாக்கினர்கள் அநீதிகள் தலைத்தோங்கும் போது வீசியிருப்பதை விவிலியத்தில் நன்கு காணலாம். உதாரணத்திற்கு திருமுழுக்கு யோவான் ஏரோதைப் பார்த்து உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல என்கிறார். அக்கல் ஏரோதின் மனதை கிழித்தெறிந்ததால் யோவானை தீர்த்துக்கட்டுகிறார். இது தான் பல இறைவாக்கினர்களுக்கு நடந்த நிலைமை.

அன்பார்ந்தவர்களே, நாமும் நம்முடைய வாழ்வில் இயேசு பயன்படுத்திய கல்லை பயன்படுத்துவோம். பிறர் மீது எறிய அல்ல. மாறாக நம் மனங்களை நோக்கி நாமே கல் எறிய பழக வேண்டும். நாம் எப்படி நம்முடைய மனக்கண்கள் முன்பாக பிறரின் குறைகளை, பாவங்களை, பலவீனங்களை உயர்த்தி பிடித்து பிறருக்கு அயோக்கியர்கள் என்ற பட்டம் சூட்டுகிறோமோ, அது போல நம்முடைய தகுதியற்ற நிலையை நினைத்து அதன் மீது கல்லெறிய வேண்டும். இல்லையென்றால், மறைநூல் அறிஞரும் பரிசேயரும் போல பிறர் மீது கல்லெறிய காத்திருப்போம். சிந்திப்போம். நம்முடைய மனங்களை நோக்கி கல்லெறிவோம். நம்மை நாமே செம்மையாக்குவோம். ஆமென்.



# தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

எசாயா 43 : 16-21, பிலிப். 3 : 8-14,
யோவான் 8:1-11

**03-04-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு, அவரோடு இணைந்து கடவுளுக்கு ஏற்புடையவர்களாக வாழ வரம்வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் மன்னிப்பு என்ற மகத்தான கருத்தை மையப்படுத்தி சிந்திக்க அழைக்கும் தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருவழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

நாம் கடந்ததைப் பற்றி அதிகம் எண்ணி கலங்கிக் கொண்டிருக்காமல், நமது பாவ வாழ்வைவிட்டு விலகி திருந்தி புதுவாழ்வு வாழ, வளமான ஒளி மயமான எதிர் காலத்தை நோக்கி புதிய விடுதலைப் பயணத்தைத் தொடங்க இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

தவறுவது மனித இயல்பு. ஆனால் தவறுக்குப்பின் திருந்தி எழுவதுதான் மனித மாண்பு. அது தான் கிறிஸ்தவனின் பண்பு என்பதை இன்றைய இறைவாக்குகள் அதிலும் சிறப்பாக நற்செய்தி வாசகம் நமக்கு வெளிப்படுத்துகின்றது.

ஒருவன் தான் பாவி என்பதை உணர்ந்து, தாழ்ச்சியுள்ள, நொறுங்கிய உள்ளத்தோடு ஒப்புரவாகும்போது கடவுள் அவனது பாவங்களை மன்னித்து மீட்பின் மகிழ்ச்சியால் அவனை நிரப்புவார். பாவங்கள் மன்னிக்கப்படும்போது அவன் கடவுளது திருமுன் புனிதனாகவும், செல்வந்தனாகவும் மாறுகிறான் என்பதை உணர்த்துகிறது இன்றைய பரிகார ஞாயிறு.

தன்னை நேர்மையாளனாகவும், மற்றவரை பாவிகளாகவும் பார்க்கின்ற மனநிலையை விடுத்து, நம்மிடமுள்ள குற்றங்களை ஒப்புக்கொண்டு, இனி பாவம் செய்வதில்லை என்ற மன உறுதியையும் மன்னிக்கும் வார்த்தையும் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனில் அடிமைகளாக இருந்த இஸ்ரயேல் மக்களை கடவுள் விடுவித்து, புதுவாழ்வு வாழ எருசலேமிற்கு அழைத்துச் செல்வார் என்ற விடுதலை முழக்கத்தை முழங்குகின்றார் இறைவாக்கினர் இரண்டாம் எசாயா. கடவுளுக்காக நாம் மனம் மாறி உறுதியாய் இருந்தால் கடவுள் நமக்காக எல்லாவற்றையும் செய்து தருவார் என்ற நம்பிக்கையைத் தரும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்துவை அறிதலும், நம்பிக்கையோடு கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதும், கிறிஸ்துவுக்காக அனைத்தையும் இழக்கத் தயாராய் இருப்பதுமே வாழ்வின் இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறார் பவுலடியார். நிரந்தரமில்லாத இன்பத்தைத் தருகின்ற பாவ வாழ்வைக் குப்பையாகக் கருதி தூக்கி எறியச் சொல்லும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) பொங்கியெழும் நீர் நடுவே பாதை அமைத்து இஸ்ரயேலை வழி நடத்திய அன்பு இறைவா, இவ்வுலக மக்களை உம்மோடு ஒப்புரவாக்கும் ஒப்பற்ற பணிகளை ஆற்றிவரும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் நல்ல உடல் நலமும், ஆன்ம பலமும் பெற்று தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட திருப்பணிகளை திறமையுடன் செய்து முடிக்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) பாலை நிலத்தில் பாதை அமைத்தவரும், பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்தவருமான அன்பு இறைவா, இந்த உலகில் நிலையான ஒப்பற்ற செல்வம் என்பது உம் திருமகன் இயேசுவைப் பற்றிய அறிவே என்பதை நாங்கள் உணர்ந்து, அதைப் பெறுவதற்காக எதையும் இழக்கத் தயாராகும் மனத்தையும், கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதும் எண்ணத்தையும் எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அருள் நிறைந்தவரும், இரக்கம் மிகுந்தவருமான தந்தையே இறைவா, எங்களது எண்ணங்களில் பாவ நாட்டங்களை ஏற்படுத்தி, அதன்மூலம் பாவத்திற்கு ஆளாகி உம்மை விட்டு விலகிச் செல்ல எம்மைத் தூண்டுகின்ற அலகையின் சோதனைகளை வென்று வாழ ஆன்ம பலத்தையும், விசுவாசத்தையும், மன உறுதியையும் எமக்குத் தாரும். எங்கள் எதிரியான சாத்தானை திரிகளை அணைப்பதுபோல் அழித்தொழிக்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) வலுத்த கையாலும், ஓங்கிய புயத்தாலும் எம்மைப் பாதுகாத்து பராமரித்து வரும் தந்தையே இறைவா, கவலைகளாலும், கண்ணீராலும் அமைதி இழந்து வாடும் ஒவ்வொருவர் மீதும் மனமிரங்கும். எங்கள் குடும்பத்தை சூழ்ந்துள்ள பிரச்சனைகள் தீர்ந்து அமைதி குடிகொள்ளவும், வேதனைகள், வருத்தங்கள், நோய்கள் அனைத்திலிருந்தும் நாங்கள் விடுதலை பெறவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



## திரு.வி.க.வின் கிறிஸ்து மொழிக் குறள்



**அப்பன் அருள்மலையை அப்படியே பேர்த்தெடுத்தல்**
**எப்படிஎன் னாலியலும் ஈங்கு**

தந்தை அருளிய மலையுரையை நூலில் உள்ளவாறே நிலை பெறச் செய்வது இந்த இடத்தில் என்னால் எப்படி முடியும்.

அப்பன் – இறைவன் (இயேசு பெருமான்) பேர்த்தே – நிலை பெறச் செய்து. இயலும் – முடியும்.

# வத்திக்கான் செய்திகள்



## மால்ட்டா திருத்தூதுப் பயணத்திற்காகச் செபியுங்கள்

உக்ரைனில் இடம்பெற்றுவரும் பயங்கரமான போர் முடிவுற வேண்டும் என்று நாம் தொடர்ந்து மன்றாடுவோம் புதன் மறைக்கல்வியுரையில் திருத்தந்தை பிரான்சிஸ்

இவ்வார இறுதியில், தான் மேற்கொள்ளவிருக்கும் மால்ட்டா திருத்தூதுப் பயணத் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்த அதேவேளை, அத்திருத்தூதுப் பயணத்திற்காகச் செபிக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மார்ச் 30, இப்புதன் மறைக்கல்வியுரையின் இறுதியில் அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

ஏப்ரல் 2,3 அதாவது வருகிற சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்களில், மத்தியதரைக் கடலில் அமைந்துள்ள மால்ட்டா தீவு நாட்டில், தான் மேற்கொள்ளவிருக்கும் திருத்தூதுப் பயணம் பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருத்தூதர் பவுலடியாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, சுடர்விடும் இந்தப் பூமிக்குச் செல்வதை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறேன் என்று கூறினார்.

திருத்தூதர் பவுலடியார், உரோம் நகருக்குவந்த கப்பல் பயணத்தில், அக்கப்பல் விபத்தை எதிர்கொண்டபோது, மால்ட்டா தீவு மக்கள், அவரை இன்முகத்தோடு வரவேற்றதைக் குறிப்பிட்ட திருத்தந்தை, இத்திருத்தூதுப் பயணம், நற்செய்தி அறிவிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்வதற்கும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் உயிரோட்டமான வரலாற்றைக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ சமுதாயத்தின் அனுபவத்தைப் பெறவும், தனித்துவமிக்கதொரு வாய்ப்பு என்று கூறினார்.

சிமியோன், அன்னா ஆகிய இரு வயதுமுதிர்ந்தோர் பற்றிய இப்புதன் மறைக்கல்வியுரையை நிறைவுசெய்தபின்னர், மால்ட்டா திருத்தூதுப் பயணம் பற்றியும், உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் குறித்தும் குறிப்பிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இக்காலத்தில் புகலிடம் தேடும் எண்ணற்ற நம் சகோதரர் சகோதரிகளை வரவேற்று அவர்களுக்கு உதவிசெய்துவரும் மால்ட்டா மக்களைச் சந்திக்கும் நாளை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறேன் என்றுரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மத்தியதரைக் கடலின் மத்தியில் அமைந்துள்ள மால்ட்டா தீவு நாடு, பாதுகாப்பு மற்றும், தரமான வாழ்வைத் தேடுகின்ற, எண்ணற்ற புலம்பெயர்ந்தோர், மற்றும், குடிபெயர்ந்தோருக்குத் தங்குமிடமாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

**03.04.2022 – ஞாயிற்றுக்கிழமை**

முதல் வாசகம் : எசாயா 43:16-21
இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 3: 8-14
நற்செய்தி : யோவான் 8:1-11

**04.04.2022 – திங்கட்கிழமை**

முதல் வாசகம் : தானி. 2:1-9,15-17,19-30,33-62
நற்செய்தி : யோவான் 8:12-20

**05.04.2022 – செவ்வாய்கிழமை**

முதல் வாசகம் : எண்ணிக்கை 21: 4-9
நற்செய்தி : யோவான் 8:21-30

**06.04.2022 – புதன்கிழமை**

முதல் வாசகம் : தானி. : 3: 14-20, 24-25, 28
நற்செய்தி : யோவான் 8:31-42

**07.04.2022 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : தொடக்க நூல் 17: 3-9
நற்செய்தி : யோவான் 8:51-59

**08.04.2022 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : எரேமியா 20: 10-13
நற்செய்தி : யோவான் 10:31-42

**08.04.2022 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : எசேக்கியேல் 37: 21-28
நற்செய்தி : யோவான் 11:45-57

**“Lent is a new beginning, a path leading to the certain goal of Easter, Christ’s victory over death.”**

- Pope Francis -





# சிலுவை சொல்லும் செய்தி

**துவக்கமாக :** தவக்காலத்தில் உடலை ஒறுத்து, மனதை ஒடுக்கி பலவித நோன்பு முறைகளையும் தவமுயற்சிகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அன்பு இவ்விதழ் வாசகர்களே இந்நிகழ்வுகளை உங்களோடு பகிர காரணம் நம் ஆண்டவர் இயேசு உண்மையாகவே மனிதத் தன்மையோடு துன்பத்தை கையிலெடுத்து தன் ரத்தத்தை சிந்தி தன் சொல்லுனா பாடுகளை அனுபவித்து தான் நம்மை மீட்டார் என்பதை தெளிவு பெறவே. அக்கால சூழல் சூழலுக்கு ஏற்பவும் தன்னை மாற்றிக்கொண்டார். சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார் இறைவனால் இறந்து உயிர் பெற்று வெற்றி வகையாய் நமக்கு வாழ்வளித்து கொண்டிருக்கிறார் என்பதையும் உணர்வோம்.

**இயேசு சிலுவையில் அறையப்பட்ட நாள்** : தூய யோவான் நற்செய்தியாளரின் குறிப்புப்படி ஏறக்குறைய பாஸ்கா திருவிழாவிற்கு முன் வெள்ளிக்கிழமை 14ஆம் நாள் நண்பகலில் ஏசு சிலுவையில் அறையப்படிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

**இயேசு சிலுவையில் அறைந்த நேரம்** : தூய மார்க் நற்செய்தியாளரின் கணக்கின்படி இயேசுவின் பாடுகள் மூன்று மணிநேர கோர்வையாக வகுக்கப்பட்டும் பிரிக்கப்பட்டும் இருந்தது.

அதிகாலை 6 மணி முதல் 9 மணி வரை இயேசு பிலாத்துவின் முன் நிறுத்தப்படுகிறார் (மாற்கு 15:1)

9 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை சிலுவையில் அறைகின்றனர்.

12 மணியிலிருந்து 3 மணி வரை இருள் சூழ்ந்து இயேசு இறக்கிறார்.

3 மணியிலிருந்து மாலை 6 மணி இயேசுவின் அடக்கம்.

**இயேசுவின் பாடுகளின் போது** : ஆயுதம் தாங்கிய வீரர்கள் 150. இயேசுவை கட்டி இழுத்தவர்கள் 23 கொலையாளிகள் 83 இயேசு தலையில் வாங்கிய அடிகள் 150 இயேசுவின் வயிற்றில் பட்ட அடிகள் 180 இயேசுவின் தோளில் பட்ட உதைகள் 80 இயேசுவின் முடியை கயிறு கட்டி இழுத்தது 24 தடவை இயேசுவின் முகத்தில் உமிழ்ந்தது 108 தடவை உடலில் பட்ட அடிகள் 6666 தலையில் பட்ட அடிகள் 110 முட்களாள் குத்தியது தாடியை பிடித்து இழுத்து 23 தடவை தலையில் பட்ட காயங்கள் 20 இயேசுவின் முள் முடியில் உள்ள கூரிய முட்கள் 72 தலையில் முட்கள் குத்திய காயங்கள் 110 நெற்றியிலும் மரண வேதனை கொடுத்த முட்கள் 3 உடலில் ஏற்பட்ட காயங்கள் 1-450 கல்வாரிக்கு உடன் சென்ற சேவகர்கள் 605 பரிகாசம் செய்தவர் 1008 கல்லறையை காத்தவர்கள் 3 இழந்த இரத்தத் துளிகள் 28,480

**தியானிக்க** இறுதியாக அன்புள்ளங்களே சாபத்தை சாதகமாக்கிக் கொண்ட இயேசுவின் சீடத்துவ வாழ்விற்கு அழைக்கப்பட்டிருக்கிற நாம் அன்றாட வாழ்வின் அனுபவங்களில் அவரது அடிச்சுவட்டில் அன்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஆழமாய் உன் செல்ல ஆவல் கொள்ளும் முயற்சி செய்வது எத்தனை இனியது! தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக இவை உங்களுக்கு உந்து சக்தியாக இருக்கட்டும்.

அருட்சகோதரி. **சௌந்தரி எபினேசர்** வ.பி.ச.




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

# தித்திக்கும் திருக்குறள்

## யாகாவாராயினும் நாகாக்க; காவாக்கால்
## சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

அதிகாரம் 13
அடக்கமுடைமை
குறள் - 127

**பொருள் :** காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும் காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

தேனொழுகப் பேசும் எல்லா உதடுகளையும் ஆண்டவரே, துண்டித்துவிடுவாராக! பெருமையடித்துக் கொள்ளும் நாவை அறுத்துவிடுவீராக! (தி.பா 12:3)

உயிரைக் கொல்லும் ஆபத்தான கருவிகளை விட அதிக ஆபத்தை விளைவிக்கும் ஒரு உறுப்பு நம்மிடம் இருக்கிறது என்றால் அது நாவு தான்.

போர்வாள் (திருப்பாடல் 55 :21) நஞ்சுள்ள அம்பு (திருப்பாடல் 64: 3) கூரிய கத்தி (திருப்பாடல் 52 :2) என்று நம் நாவைப் பற்றி நமக்கு திருவிவிலியம் கூறுகிறது. ‘எலும்பு இல்லாத இந்தச் சிறிய நாக்கு மனிதரை நசுக்கிக் கொன்று போடும்’ என்பது கிரேக்க நாட்டுப் பழமொழி. ‘வாளால் உயிரிழந்தவர்களை விட நாவினால் கொன்று குவிக்கப்பட்ட தொகை எண்ணில் அடங்காது’ என்பது துருக்கியர் பழமொழி. ‘பாதம் இடறினால் பரவாயில்லை; நாவை மாத்திரம் இடற விட்டு விடாதே’ என்று எச்சரிப்பது எபிரேய பழமொழி. ‘நாவைக் கட்டுப்படுத்த வல்லவனே நிறை மனிதன்‘ என்கிறார் புனித யாக்கோபு (3:3).

### நாவினால் விளையும் 7 தீமைகள்:

**1. வீண் பேச்சு:**

மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும். (நீதிமொழிகள் 10: 19)

வஞ்சக பேச்சாலும் மனமுடைந்து போகும் (நீ.மொ. 15:14)

மதிகேடர் தம் வாயால் அழிவர்; அவர் பேச்சு அவர் உயிருக்கே கண்ணி ஆகிவிடும். (நீதிமொழிகள் 18: 7)

மதிகேடர் பேசத் தொடங்கினால் வாக்குவாதம் பிறக்கும். அவரது பேச்சு அவருக்கு அடி வாங்கி தரும். (நீதிமொழிகள் 18 :6)

நாவை காப்பவர் தம் உயிரையே காத்துக் கொள்வார். நாவைக் காவாதவன் கெட்டழிவான். (நீதிமொழிகள் 13::37)

மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் தீர்ப்பு நாளில் கணக்குக் கொடுக்கவேண்டும் என உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் வார்த்தைகளைக் கொண்டே நீங்கள் குற்றமற்றவர்களாக கருதப்படுவீர்கள் என்று இயேசு கூறுகிறார். (மத்தேயு 12: 36,37) ஆகவே நீங்கள் பேசும்போது ஆம் என்றால் ஆம் எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது. என்றார் இயேசு . (மத்தேயு 5: 37).

உன் சொற்களை நிறுத்திப் பார்க்க துலாக்கோலையும், எடைக் கற்களையும் செய்து கொள்; உன் வாய்க்குக் கதவு ஒன்று செய்து அதைத் தாழிடு. நாவால் தவறாத படி எச்சரிக்கையாயிரு. இல்லையேல் உனக்காய்ப் பதுங்கியிருப்போர் முன் வீழ்ச்சியுறுவாய். (சீராக் ஆகமம் 28:25 26)

**2. பழிச்சொல்:**

பழிபேசுவோருக்குக் கடவுளின் அரசு உரிமை ஆகாது (1 கொரிந்தியர் 6: 10)

பழிச்சொல்லை விட்டு ஒழியுங்கள் (எபேசியர் 4 :31)

இறுதிநாளில் பழித்துப் பேசுவோர் தோன்றுவர் (2 தீமோத்தேயு 3:2)

பழிப்புரை, வெட்கக்கேடான பேச்சு ஆகிய எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. (கொலேசியர் 3:8)

பழிச்சொல்லால் சீரழிந்தவர்கள் உண்மையை இழந்தவர்கள்.(1தீமோத்தேயு 6: 5)

வாயினின்று வெளிவருபவை உள்ளத்தில் இருந்துதான் வருகின்றன இவையே மனிதரைப் தீட்டுப்படுத்துகின்றன (மத்தேயு 15: 18 -19)

மனக்கசப்பு ,சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் எல்லாவற்றையும் தீமை அனைத்தையும் உங்களை விட்டு நீக்குங்கள். (எபே.4:31).

**3. புறணி பேசுதல்:**

புறங்கூறுபவர்களிடம் பொறாமை, கொலை, சண்டைச்சச்சரவு,வஞ்சகம் தீவினை மலிந்து கிடக்கும்.

(உரோமர் 1:29) புறணிப் பேச்செல்லாம் விலக்குங்கள்.(1பேதுரு 2:1)

புறணிப் பேச்சுனின்று உங்கள் நாவைக் காத்துக் கொள்ளுங்கள். (சால.ஞான நூல் 1:11)

புறம் கூறுபவன் என்று பெயர் எடுக்காதே (சீராக் 5 :14)

புறணி கேட்பது பலருக்கு அறுசுவை உண்டி உண்பது போலாம். அதை அவர்கள் பேராவலோடு விழுங்குவார்கள். (நீதிமொழி 26: 22)

**4. பொய்சாட்சி:**

உன் அயலானைக்கு எதிராகப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக. (இணைச்சட்டம் 5 :20)

பொய் சாட்சி சொல்பவன் அழிந்தொழிவான். (நீதிமொழிகள் 21:28)

பொய் சாட்சி சொல்பவர் தண்டனை அடையாமல் போகான். (நீதிமொழிகள் 19: 5)

தன் அயலானுக்கு விரோதமாய்ப் பொய் சாட்சி கூறுபவன் எறி படையும், வாளும், கூர்மையான அம்பும் போலாவான். (நீதிமொழி 25: 18)

பொய்யுரையே கூறுபவர் தப்பித்துக் கொள்ள மாட்டார். (நீதிமொழிகள் 19: 15)

உண்மையை எதிர்த்துப் பொய் பேச வேண்டாம். (யாக்கோபு 3: 15).

**5. அவதூறு:**

ஒருவரைப் பற்றி ஒருவர் அவதூறு பேசாதீர்கள் (யாத்திராகமம் 4 :11)

அவதூறு பேசுபவர் கடவுளை வெறுப்பவர்கள்; இழித்துரைப்பவர்கள், செருக்குற்றவர்கள், வீம்பு பாராட்டுபவர்கள், தீய வழிகளைக் கண்டுபிடிப்பவர்கள்; பெற்றோருக்கு கீழ்படியாதவர்கள்; சொல் தவறுபவர்கள்; மதி கெட்டவர்கள்; பாசம் அற்றவர்கள்; இரக்கம் இல்லாதவர்கள்; சாவுக்குரியவர்கள். (உரோம. 1: 30 - 32)

**6. சாபமிடல் :**

தன் தந்தையையோ, தாயையோ சபிப்பவன் சாகவே சாவான். (விடுதலைப்பயணம் 21: 17)

நீ யார் யாருக்கு ஆசீர் அளிப்பீரோ, அவர்கள் ஆசீர் அடைவார்கள் என்றும், யார் யாரைச் சபிப்பீரோ அவர்கள் சபிக்கப்பட்டவரென்றும் எனக்குத் தெரியும். (எண்ணிக்கை 55: 6)

**7. ஆணையிடவே வேண்டாம்.** (மத். 5 : 35-37)

உன் வாய் ஆணை இடுவதற்கு பழகாதிருக்கக்கடவது. ஏனெனில் அதனால் குற்றங்கள் பல நேரிடும். (சீராக். 23:9)

பொய் ஆணையிடுவானாயின் அவன் மன்னிக்கப்பட மாட்டான். அவன் குடும்பமும் தண்டனையால் நிரப்பப்படும் . (சீராக் 23 :14)

ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் ;எப்படி வாழக் கூடாது என்பதனைத்தையும் திருவிவிலியத்தை வாசித்து, தூய ஆவியானவர் வழியாக நாம் அறிந்து கொள்ளலாம். எனவே தினமும் விவிலியம் வாசிப்போம்; நம் நாவைக் காத்துக் கொள்வோம். ஆன்மாவைக் காத்துக் கொள்வோம். நம் நாவை இறைவன் புகழ்பாட எப்பொழுதும் அர்ப்பணிப்போம்.

*இயேசுவுக்கே புகழ்*

**-லீமா விக்டோரியா**



**திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்**